LIBRARY
20 JUL 1965
STATE LEGISLATURE, MAD

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 6th March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Advance Increment to Police personnel*

*3 *S.N.Q.*—SRI RAMA. ARANGANNAL: Will the Hon. Minister for Home be pleased to state—

(*a*) whether any advance increment has been sanctioned to the Police personnel in the State recently;

(*b*) if so, the reasons; and

(*c*) whether a copy of the orders will be placed on the Table of the House?

THE HON. SRI P. KAKKAN: (*a*) The Government have decided to grant *one* advance increment to all officers and men of the Police Force including the Armed Units in this State who were on duty during the period of Anti-Hindi Agitation;

(*b*) The Government have desired to place on record their appreciation of the good work done by all officers and men of the Police Force during the recent disturbances by the grant of *one* advance increment to all Police Personnel who were on duty during the period; and

(*c*) Yes, after the orders are issued.

**திரு. இராம. அரங்கண்ணல்:** இந்தக் காவல் துறையினர் மிகவும் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தில்தான் உணர்ந்ததா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** அரசாங்கத்தில் பணிசெய்கின்ற அதிகாரிகள் எவ்வளவு உண்மையாக இருந்தார்கள் என்பதை ஒரு பழமொழி சொல்வார்களே "A friend is proved in distress" அதைப்போல இந்தச் சமயத்தில்தான் அரசாங்கத்திற்கு விசேஷமாக மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் எவ்வாறு பாதுகாப்பு அளித்தார்கள் என்பது தெரியவந்தது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஸ்பெஷல் இன்கிரிமென்ட் என்று குறிப்பிட்டார்கள். துப்பாக்கிப் பிரயோகம் கண்ணீர்ப்புகை தடியடி இப்படிப்பட்ட காரியங்ககளைச் செய்வதற்காகத்தான் இந்த ஸ்பெஷல் இங்கிரிமென்ட் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[6th March 1965

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தங்களுக்கு வந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கு வந்த ஆபத்தைத் தடுத்து பாதுகாத்ததற்குத்தான் இப்போது இந்த இன்கிரிமென்ட் அளிக்கப்பட்டது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** பொதுவாக எல்லா போலீஸ்காரர்களுக்கும் இன்கிரிமென்ட் கொடுத்தது ஒரு புறம் இருக்க, அடிபட்ட போலீஸ் அதிகாரிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** கொடை எல்லாப் போலீஸ்காரர்களுக்கும் சகட்டுமேனியாக வருகிறது. அப்படியில்லாமல் உண்மையிலேயே தவறு செய்த போலீஸ்காரர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கொடை அளிக்கும் விஷயத்தில் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி போலீஸ்காரர்கள் ஏதாவது தவறாக நடந்தால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, நம்முடைய போலீஸ்காரர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று இப்போதுதான் தெரியவருகிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய நம்பிக்கையில் இப்போது ஏதாவது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா ? சந்தேகம் இருக்கிற காரணத்தினால்தான் வெளியிலிருந்து போலீஸ்காரர்களையும், ராணுவத்தினரையும் வரவழைத்தார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று இப்போதுதான் தெரிந்தது என்று நான் சொல்லவில்லை. எப்போதும் அவர்களுடைய நடத்தையிலே அரசாங்கத்திற்கு நம்பிக்கையுண்டு. அவர்களிடம் நம்பிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினால் வெளியிலிருந்து போலீசார் வரவழைக்கப்படவில்லை. பொதுமக்களுக்கு மேலும் பாதுகாப்பு வேண்டும் என்று கருதப்பட்டது, அதை ஒட்டித்தான், எதிர்பாராத சம்பவங்களை ஒட்டி, அப்போதிருந்த நிலைமையை சமாளிக்க மக்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு வெளியிலிருந்து போலீஸ்காரர்களும், ராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டனர்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுமக்களுடைய கோபத்திற்கு பலியாகி உயிர் இழந்த போலீஸ்காரர்களுடைய குடும்பத்திற்கு டெல்லி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தார்கள். அப்படியிருக்கும்போது முதல் அமைச்சர் அவர்களும், போலீஸ் அமைச்சர் அவர்களும் ஏன் அனுதாபம் தெரிவிக்கவில்லை ?

6th March 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யார் யார் அனுதாபத்திற்கு உரியவர்கள் என்பதை நான் அங்கத்தினரிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களுக்கு சன்மானம் அளிப்பதை யாரும் தவறாகச் சொல்லவில்லை. அதிகமாக சுடுகின்றவர்களுக்கு சன்மானம் கொடுப்பதற்கு சர்க்காருக்கு யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது வெறுக்கத்தக்கது. போலீஸ்காரர்கள்மீது சுமத்தப்படுகின்ற ஒரு பெரிய அவதூறு ஆகும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** போலீசார்களுக்கு அளிக்கப்பட்ட இன்கிரிமென்டை நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில் அவர்களுடைய அடிப்படை சம்பளத்தையும் உயர்த்த அதாவது ஒரு கான்ஸ்டேபிளுக்கு ரூ. 100 அளவிற்கு உயர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீசார்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் அவ்வப்போது பரிசிலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுவருகிறது.

**திரு. எம். எஸ். மணி :** ஆந்திராவிலிருந்து போலீசாரை அழைத்த காரணத்தினால் போலீசார்மீது ஏதாவது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே கூறினேன்; அவநம்பிக்கை என்ற பிரச்சினை இந்த அரசாங்கத்திற்கு இல்லை. எதிர்க் கட்சியினருக்கு வேண்டுமானால் அவநம்பிக்கை இருக்கலாம். தமிழ்நாட்டு மக்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கும் எண்ணத்திலே வெளியிலிருந்து போலீஸ் வரவழைக்கப்பட்டது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஹிந்தி போராட்டத்தின்போது இறந்த போலீசார்களின் குடும்பத்திற்கு சன்மானம் அளிக்கப்பட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இறந்த போலீசார்களின் குடும்பத்திற்கு உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சாவின் சன்னிதானத்தில் எல்லாரும் சமம் ஆதலால், இறந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு கொடுத்ததுபோல் கூடலூரில் இறந்த கான்ஸ்டெபில்கள் குடும்பத்தினர்களுக்கும் ரூபாய் இருபதினாயிரம் கொடுக்க ஏன் அரசாங்கம் முன்வரவில்லை?

**கனம் திரு. பக்தவத்சலம் :** அரசாங்கம் யார் யாருக்கு எத்தகைய உதவி அளிக்கவேண்டுமோ, அதை அளிக்கிறது. இந்த விஷயத்தில் கனம் அங்கத்தினருடைய யோசனையை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

[6th March 1965

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் முன்பு கூறியபோது போலீசார்களுக்கு மட்டும் ரூபா, அணா, பைசா முறையில் பாராட்டுதல் தெரிவித்ததாகச் சொன்னார்கள். போலீசார்களைப் போலவே நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பணியாற்றிய ஆர்.டி.ஓ., கலக்டர் முதலிய மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் ரூபா, அணா, பைசா மூலமாக பாராட்டுதல் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** யார்யார் எத்தகைய ஆபத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். யார் யார் தங்களுக்கு வந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் உதவி செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறது. அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அதை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. எம். தண்டாயுதபாணி:** தலைவர் அவர்களே, இந்தக் கலவரத்தில் உயிர் போன சப்-இன்ஸ்பெக்டர்கள், ஹெட் கான்ஸ்டேபிள்கள், கான்ஸ்டேபிள்கள் அவர்கள் பதவி ஓய்வு பெறும்வரை, அவர்கள் குடும்பத்திற்கு சம்பளம் தருவதாக அறிவிக்கப்பட்டு வந்ததே, அதன்படி அவர்களுக்கு சம்பளம் தொடர்ந்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதுவும் கவனிக்கப்படும்.

**திரு. பி. கார்ச்சா கவுடர்:** நமது மாநிலத்தின் போலீஸாரின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் காரணத்திற்காக நமது போலீஸ் படையை விஸ்தரித்து ஆங்காங்கே மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த விஷயம் தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஏ. ஆறுமுகம்:** நம் மாநிலத்திலே ஊர்வலம் நடத்திய மாணவர்கள் ஒழுங்காகவும், அடக்கமாகவும் நடந்துகொள்வார்கள், இதனாலேயே போலீஸ்காரர்கள் அவர்களை அதிகமாக அடக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்பட்டதா, இதனால்தான் இப்படி அக்கிரமங்கள் நடக்க ஏதுவாக இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தக் கேள்விக்கு பதிலிலிருந்து எழுகிற பிரச்னை அல்ல இது. மாணவர்களைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் முதலில் தலையிடவேண்டாம் என உத்தேசித்து இருந்தது. அதற்குமேல் நிலைமை கட்டுக்கடங்காமல் பலாத்கார செயல்கள் ஏற்பட்டபோது போலீஸார் அதைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சில சமயங்களிலே எதிர்பாராத வகையிலே எண்ணிக்கை குறைவாக இருந்ததால் உடனடியாக சமாளிக்க முடியவில்லை என்பது உண்மைதான்.

6th March 1965]

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் கிளர்ச்சியினால் காயமுற்ற போலீஸ்காரர்களின் தொகை 200 என்று ஐ.ஜி. அறிவித்து இருக்கிறார்கள். காயமுற்ற பொதுமக்கள் எத்தனை பேர் என்று கனம் அமைச்சர் சொல்ல முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த தகவல் என்னிடம் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** உயிரிழந்த போலீஸ்காரர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி செய்ததை நான் ஆதரிக்கிறேன், பாராட்டுகிறேன். அதேபோன்று உயிரிழந்த மாணவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

### கோவை நகரில் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கைது

*163 கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோவை நகரில் நவம்பர் மாத இறுதியில் மத்திய உணவு அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் வருகையின்போது இடதுசாரி கம்யூனிஸ்டுகள் எவரேனும் கைது செய்யப்பட்டனரா ?

(இ) ஆம் எனில், அவர்கள் என்ன காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டனர் ?

(உ) எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) It was apprehended that the black flag demonstrations they had planned to stage during the visit of the Union Food Minister on 28th November 1964, would lead to a breach of peace: and

(c) One hundred and eighty-five persons were arrested under Section 151, Criminal Procedure Code.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, உணவு நெருக்கடி காரணத்தைக்கொண்டு அதை அமைதியான முறையிலே தெரிவிப்பதற்குத்தான் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அமைதியாக இருந்தும், ஆர்பாட்டம் செய்கிறார்கள் என்ற அப்படி ஒரு கருத்தை சர்க்காரே கொண்டார்களா, அல்லது அதற்கு ஏதாவது முகாந்திரம் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உணவு பிரச்சினை எல்லோருக்கும் கவலை அளிக்கக்கூடிய விஷயம். உணவுப் பிரச்னையைப் பற்றி குறிப்பிட்ட யோசனைகள் சொல்வதற்கு வேறு வகைகள் இருக்கின்றன. இதற்காக தெருக்களில் வந்து கருப்புக்கொடி காட்ட அவசியம் இல்லை. கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தினால் அமைதிக்கு பங்கம் விளையக்கூடுமென்று கருதி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது.